தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 11, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 ஆகஸ்ட் 27, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 16, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

16–

கொள்முதல் நிலையம்

***647–அ–திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரில் வாழைத்தார் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை.

வினா எண் 17, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

17–

ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை

***856–திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கிருஷ்ணராயபுரம், மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்) தொழிற்சாலை சரிவர இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்சாலை முழுமையாக இயங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதித் துறையின் 19–2–1997 ஆம் நாளிட்ட அரசாணை எண் 75, அரசின் கொள்முதல்களில் அரசுத் துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட முன்னுரிமையை ரத்து செய்ய வழிவகுத்தது. ஆகையால், டான்செம் நிறுவனத்தின் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்ப் பிரிவு தயாரிக்கும் பொருட்களுக்கு வழங்கு ஆணைகள் தொடர்ந்து கிடைக்கப்பெறாததால் இந்த ஆலையின் இயக்கம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள்/தொழில் பிரிவுகள் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS